## எழுச்சிப்பாடல் நிகழ்ச்சியில் மக்கள் வெள்ளம்

நேற்று மாலை யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தமிழக கலைஞர் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர், மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் டொமினிக் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தை யாழ்மாவட்ட தளபதி பானு ஆரம்பித்து வைத்தார் விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பொறுப்பாளர் புதுவை ரத்தின்துரை கலைஞர்களை அறிமுகம் செய்து வைத்தார். விடுதலைப்புலிகளின் கலை கலாசார பிரிவின் யாழ் மாவட்டப் மகளிர் பிரிவு பொறுப்பாளர் சீதா, காசிஆனந்தன், மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் ராஜன், தேனிசை செல்லப்பா ஆகியோர் உரையாற்றினர் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியாரும் இந் நிகழ்சியில் கலந்து கொண்டனர்.

—8ம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 ஒலி 78 செவ்வாய் 24-04-1990 (சித்திரை 11) ரமழான் 27

# விழிப்பாயிருங்கள்! சிங்கள பௌத்த இனவாதம் இன்னமும் அழியவில்லை

## தெற்கில் இன்னமும் ஒரு மனமாற்றம் ஏற்படவில்லை - மாத்தயா

சிங்கள பௌத்த இனவாதம் அழிந்து விடவில்லை தெற்கில் நல்லமனமாற்றம் ஏற்படவில்லை இதை புரிந்து கொண்டு தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும என விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவரும் மக்கள் முன்னணி தலைவருமான மாத்தயா நேற்று யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற தேனிசை செலலப்பாவின் இசை நிகழ்ச்சியில பேசும் போது குறிபபிட்டார்



இந்நிகழ்ச்சியில் மாத்தயா தேனிசை செல்லப்பாவுக்கு விடுதலைப்புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கம் ஒன்றை அணிவித்துக் கௌரவித்தார்.

அந்நிகழ்ச்சியில்தொடர்ந்து பேசிய மாத்தயா,

விழிப்பாயிருப்போம், நாம் அறிந்த காலம் தொட்டு படித்த வரலாறு முழுவதும் எமக்குக் கூறும் கதை சிங்கள பௌத்த இனவாதம் இலங்கையில் தமிழினத்தை பூண்டோடு அழிக்ககங்கணம் கட்டி நிற்கிறது என்பதே.

இது காலத்திற்கு காலம் வெவ்வேறுஅளவுகளில்வடிவங்களில்தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை இந்தசிங்கள பௌத்த இனவாதம் கட்டவிழ்த்து விட்டது.

இதன் காரணமாக நாம் இன்று இருக்கும் இந்த குறுகிய அல்லது இழிந்த நிலைக்கு தள்ளப்பட்டோம். இன்றும் எம்மை அடக்க நினைக்கும் அல்லது நாம் எதிர்த்து போராடும் சிங்கள பௌத்த இனவாதம் எனப்படுவது அழிநது விடவில்லை அல்லது தெற்கில் ஒரு நல்ல மன மாற்றம் ஏற்பட்டவில்லை. இதைப் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.


## மீண்டும் தமிழரை'குடியேற்ற முயற்சி

(மட்டகளப்பு)


ஐந்து வருடங்களுக்கு முன் கெவிறியாமடு கிராமத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது தொடர்பாக நேற்று மாவடி கிராம அபிவிருத்தி சங்கத்தில் மா நா டு ஒன்று நடைபெற்றது.

இம்மாநாடு அரச அதிபர் யோகநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மட்டக்

— 8 ஆம் பக்கம் பார்க்க



மேலே உள்ள படத்தில் யோகி, காசிஆனந்தன், தேனிசை செல்லப்பா, மாத்தயா, டானு அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் மேடையில் இருக்கின்றனர் கீழே மக்கள் திரள்



தேனிசை செல்லப்பாவும், சுவர்ணலதாவும் மேடைக்கு செல்லுகையில் முரசொலிக்கு வழங்கிய பிரத்தியேக போஸ்

## ஐ. நா. அபிவிருத்தி அதிகாரிகள் யாழ் கல்வித்திணைக்கள விஜயம்

நேற்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளான திரு. ரூபேட், திரு சொக்மன் பீற்றர் உட்பட பல அதிகாரிகள் குழுவொன்று யாழ் கல்வித்திணைக்களத்திற்கு நேரடி விஜயத்தை மேற்கொண்டது.

முறைசாரக் கல்விப்பிரிவுக்கு தாம் பல உதவிகள் செய்ய உத்தேசித்திருப்ப தாகவும்,

— 8 ஆம் பக்கம் பார்க்க

## மல்லிக்குப் பெரும் தட்டுப்பாடு

கூட்டுறவுச் சங்கக்கடைகளில் மல்லிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மல்லியை கொள்வனவு செய்யாமையினாலேயே இத்தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தனியார் கடைகளில் தரமான மல்லி ஒரு கிலோ 42 ரூபாவிலிருந்து 45

—8 ஆம் பக்கம் பார்க்க

## உணவு முத்திரை விநியோகம்

இவ்வருடத்திற்கான உணவு முத்திரை விநியோகம் யாழ் மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

ஜனசக்தி உணவு முத்திரை பெறுபவர்களுக்கு இது வழங்கப்படாததனால் புதிதாகப்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## கணிதத்திற்கு 'சீ' போடவும் ஆசிரியருக்கு மாணவன் கடிதம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் க.பொ.த சாதாரணதர பரீட்சை விடைதாள்கள் திருத்தும் ஆசிரியர் ஒருவருக்கு விசேட கடி

—8 ஆம் பக்கம் பார்க்க

### முரசொலி நேரடி ரிப்போட்டினுல் பலன்

## கீரிமலையில் மதுபானம் விற்க விடுதலைப் புலிகள் தடை

(கீரிமலை)

கீரிமலை கேணியடிப்பகுதியில் மதுபானம் விற்பனை செய்வது பாவிப்பது விடுதலைப் புலிகளால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. கீரிமலைப் பகுதிகளில் சில கடைகளில் மதுபானங்கள்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### கல்வி

பாலராசிரியர் சங்கம் நடாத்தும் பாலராசிரியர் பயிற்சிநெறி 1990க்கு க. பொ. த. [சா/த] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம் நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் டயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா. உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 04221

## கிராமம் தோறும் இணக்க சபைகள்

1987 ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் சகல கிராம சேவையாளர்கள் பிரிவுகள் தோறும் இணக்க சபைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

கிராமங்கள் தோறும் எழும் மக்களின் பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்க்கும் பொருட்டே இவ் இணக்க சபைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாவட்ட முகாமைத்துவ நிலையம்

கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் கல்வியின் உச்சப் பயனை மாணவர்களும் சமுதாயமும் பெற பாடசாலையில் முகாமைத்துவ பணியை ஆற்றும் அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கும் நோக்கத்தோடு மாவட்டமுகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

மாகாண அமைச்சின் பணிப்புரைகளுக்கேற்ப திரு. த. குருகுலராஜா அதிபர் கிளி தர்மபுரம் ம. வி. பாடசாலை முகாமைத்துவ ஆலோசகராக (எஸ். எம். ஏ) நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையை பிரதிக் கல்விப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மாவட்டத்திலுள்ள தரம் 11, தரம் 111 பாடசாலை அதிபர்களையும், சகல பாடசாலைகளிலுமுள்ள உப அதிபர்கள், வகுதித்தலைவர்கள் ஆகியோரை உச்சப்பயனை மாணவர்களும் பாடசாலைகளும் பெறும்படி முகாமைத்துவப் பயிற்சியை வழங்கும்.

### கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் தமிழ் மொழி ஆய்வு கூடத்தை உடுவில் மகளிர் கல்லூரியில் அமைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து தர வேண்டும் என, மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகமும் கோட்டக் கல்வி அலுவலக தமிழ்ச் சங்கமும் கூட்டாக இது பற்றி வேண்டுகோள் அடங்கிய மகஜரை கல்வி அமைச்சின் தமிழ்க் கல்விப் பணிப்பாளர் பிரிவு திரு வெ. சபாநாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளான.

தமிழ் மொழி ஆய்வு கூடத்தை அமைப்பதற்கான வசதியும், வாய்ப்புகளும் உடுவில் மகளிர் கல்லூரியில் உள்ளதெனவும், யாழ் மாவட்டத்திற்கு மத்தியில் இக்கல்லூரி இருப்பதோடு, தமிழ் மொழி ஆய்வு கூடம் அங்கு அமைவது பொருத்தமானது எனவும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பாஷையூர் சாதனை

யாழ் நகர் தெற்கு கோத்தணிப் பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டியில் பாஷையூர் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய மாணவிகள் பத்து முதற் பரிசுகளையும் எட்டு இரண்டாவது பரிசுகளையும், எழு மூன்றுவது பரிசுகளையும் சுவீகரித்துச் சாதனை புரிந்துள்ளனர்.

இம் மகளிர் வித்தியாலய மாணவிகளான செல்வி செ. ஜெஸ்வின் 19 வயதுப் பிரிவிலும், செல்வி மேரிகிளான்சியா 11 வயதுப் பிரிவிலும் சிறந்த வீரங்கானைகளாகத் தெரியப்பட்டுள்ளனர். (36(

### சனசமூகநிலைய ஆண்டுவிழா போட்டிகள்

நாயன்மார்கட்டு பாரதிசன சமூகநிலையத்தின் வருடாந்த ஆண்டு விழா எதிர்வரும் 27ம் 28ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

விழாவையொட்டி மரதன் ஓட்டம் சயிக்கிள் ஓட்டப் போட்டி, விளையாட்டுக்கள்ச் கலைநிகழ்சிகள் என்பனவும் நடைபெறவிருப்பதாகநிலைய, செயலாளர்தெரிவித்தார், (33

### விடுதி சேதம்

வேலணை அரசினர் ஆஸ்பத்திரியில் உள்ள குடும்ப நல சேவையாளர்கள் தங்கும் விடுதி முற்றாக சேதமடைந்துள்ள காரணத்தினுல் இங்கு தங்கிக்கடமையாற்றிய குடும்ப நல சேவையாளர்கள் இந்த ஆஸ்பத்திரியின் வேறு பகுதியில் குடும்பமாக தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச்சபை ஆதரவில்

## 50 தமிழ் யுவதிகளுக்கு தமிழ் நாட்டில் பயிற்சி

தென்னிந்தியாவில் கிராமிய மகளிர் குழுக்கள்- கிராமிய சமூக, பொருளாதார, ஆரோக்கிய துறைகளை மேம்படுத்த மேற்கொள்ளும் முறைகள். செயற்திட்டங்கள் பற்றி அறியவும் பயிற்சி பெறவும் இருகட்டங்களாக 50 யுவதிகளை பனை அபிவிருத்திச் சபை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

அங்கு இவர்கள்பனங் கைத்தொழில் துறையை மட்டுமன்றி ஏனைய துறைகளையும் அவதானிப்பர் முகாமைத்துவம், அங்கத்தவர் பங்களிப்பு சுய தொழில் முயற்சிகள், தனி நபர், கூட்டு முயற்சிகள் போன்ற பல் துறை அறிவு அனுபவங்களையும் இவர்கள் பெறுவதற்கான முன்னேடி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபை தலைவர் தெரிவித்தார்.

முதற் தொகுதி 25 பேர், ஏப்பிறல் முதல் வாரத்தில் அனுப்பப் பட்டுள்ளனர். அவர்கள் நாட்டிற்கு மீண்டதும் இரண்டாம்தொகுதி 25பேரும் பயணமாவர்.

பயிற்சி முடிந்தவர்கள் இங்குள்ள மகளிர் குழு அங்கத்தவர்களுக்கு அவ்வவ் விடயங்கட்கு பொருத்தமான தொழி) பயிற்சிகளை வழங்குவர். (37

### பயிற்சி வகுப்பு

பதினேராம் ஆண்டில் கல்வி பற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கு இம்மாதக் கடைசியில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இலவச ஆங்கில வகுப்புக்களை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது.


## அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் யாவும் 1—5—90ல் ஆரம்பமாகின்றன

1.) அக்குபங்சர் பயிற்சி, M. Ac. F (ஆங்கில மொழி மூலம் சர்வதேச பல்கலைக்கழகப் பரீட்சை)

போதனாசிரியர்:-

**Dr. V. S. K. சிவலோகநாதன்**

2) அக்குபங்சர் பயிற்சி, M. Ac. A. (தமிழ் மொழி மூலம்) இலங்கை (அக்குபங்சர் சங்கப் பரீட்சை)

போதனாசிரியர்:-

**Dr. V. P. சுந்தரராஜன்**

பிரதம பரீட்சையாளர்:-

**பேராசிரியர்**

**Dr. அன்ரன் ஜயசூரியா அவர்கள்**

வைத்தியர்களும் வைத்தியமாணவர்களும் மேற்படி பரீட்சைககுத் தோற்றும்வண்ணம் வகுப்புகள் நடைபெறும.

விபரங்கட்கு

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்

04212


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### ஆச்சிமுத்து பொன்னையா

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 1.7.1909 | 25.3.1990 |

திதி

24.4.1990

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழ வைத்து இமைப் பொழுதில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! ......தாங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலமானுலும் உங்கள் பசுமையான நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

ஆலங்குளாய் றோட்,
சண்டிலிப்பாய்.

04219


## "M" THREE TRAVELS

வழங்கும்

### வெளிநாட்டுப் பிரயாணம்

**குவைற்**

| | | வெற்றிடம் |
|---|---|---|
| (1) | CAR PAINTER | 5 |
| (2) | WELDER | 5 |
| (3) | SCHOOL CLEANERS (பாடசாலை சுத்திகரிப்பாளர்) | 15 |

**சவூதி அரேபியா**

(1) AIR PORT TAXI DRIVER 25 (விமான நிலைய வாடகைக் கார்ச்சாரதி)

**சிங்கப்பூர்**

HOUSE MAID 40 (வீட்டுப்பணிப் பெண்கள்)

● PASS PORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

**"M" Three Travels**

| தலைமையலுவலகம் | கிளையலுவலகம் |
|---|---|
| "இந்திரபவனம்" | இல 1, 2வது ஒழுங்கை |
| சோதி வீதி. | மின்சார நிலைய வீதி, |
| காங்கேசன்துறை. | யாழ்ப்பாணம். |

04225

## பிரயாண ஒழுங்குகள்

★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

★ ஈராக் (அரசாங்க வைத்தியசாலை)

ஈராக் நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | ஆங்கில வைத்தியர் | — (2) | I D 250 |
| 02. | ஆண் தாதி (மேல் நேர்ஸ்) | — (4) | I D 140 |
| 03. | தொழிலாளர் | — (40) | I D 80 |

5வருட ஒப்பந்தம் உணவு இருப்பிடம் வைத்தியம் இலவசம்

**V. T. R. TRAVELS**

41. 3rd Cross Street, JAFFNA

## மருந்துக் கடைகளின் மனச்சாட்சி வியாபாரம்

இன்று யாழ்.மாவட்டத்தில் ரியூட்டரிகளுக்கு அடுத்தபடியாக எங்கும் வியாபித்திருப்பது மருந்துக் கடைகளாகும்.

சந்திக்குச் சந்தி மருந்துக் கடைகளைக் காண முடிகிறது.

வெளிநாட்டுப் பணம் வடக்கு-கிழக்கிற்கு வரத் தொடங்கியவுடன் மக்கள் அரச வைத்தியசாலைகளை நாடுவதைத் தவிர்க்கத் தொடங்கினர்.

தனியார் வைத்தியசாலைகளையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

அதையே மதிப்பென்று கருதுவோரும் உண்டு. அரச வைத்தியசாலைகளின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை குறைந்துள்ளதும் இதற்கொரு காரணம்.

மருந்தாளர் இல்லாத வைத்தியசாலைகளில், சிற்றூழியர் மருந்து கொடுப்பதும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துப் பல செய்திகள் பத்திரிகைகளில் வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் பல அரச வைத்தியசாலை டாக்டர்கள் தனிப்பட்ட சேவை செய்கின்றனர்.

வெளியேயுள்ள ஒருசில தனியார் மருத்துவமனைகளில் காசுகட்டி இலக்கம் எடுத்தாலே இவர்கள் நோயாளிகளைக் கவனிப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இக்குறைபாடுகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும்;

மக்கள் தனியார் வைத்தியசாலைகளிடமுள்ள மோகத்தைக் குறைத்ததாகத் தெரியவில்லை.

தனியார் வைத்தியர்கள் பெரும்பாலும் மருந்துகளை வெளியே மருந்துக் கடைகளில் வாங்குமாறே நோயாளிகளைப் பணிப்பது வழக்கம்.

இதனாலேயே இன்று தனியார் மருந்துச் சாலைகள் வடக்கில் பெருகியுள்ளன.

ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் இம் மருந்துக் கடைகளுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இவற்றில் முக்கியமானவை ஒவ்வொரு மருந்துக்கடைகளிலும் கட்டாயமாக ஒவ்வொரு பாமஸிஸ்டும், குளிர்சாதனப் பெட்டியும் அவசியம் இருக்க வேண்டும் என்பதாகும்.

இன்று நோயாளிகள் பலர் அடுத்தவர்களின் பேச்சைக்கேட்டுப் பல மருந்துகளைப் பாவிக்கின்றனர்.

இதனால் பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. இவர்களுக்கு பாமஸிஸ்ட்டுக்கள்பட்டுமே அறிவுரை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இன்று மருந்துக் கடைகளில் நடைபெறும் மிக மோசமான மோசடி காலவதியான மருந்துகளை விற்பனை செய்வதாகும்.

அனேகமாக மருந்துக் குளிசைகளைச் சில்லறையாகவே நோயாளிகள் கடைகளில்வாங்குகின்றனர்

இதனால், அவர்களுக்குத் தாம் வாங்கும் மருந்துகள் புதியவைவா? காலவதியானவைவா? என்று கண்டுபிடிக்க முடியாதுள்ளனர் கடை உரிமையாளர்கள் இதில் மிகச் சுலபமாகத் தில்லுமுல்லுச் செய்ய வாய்ப்புண்டு மக்களின் ஆரோக்கிய வாழ்வில் அக்கறை கொண்டு, பொறுப்புணர்ச்சியுடன் மருந்து வர்த்தகர்கள் நேர்மையைக் கடைப்பிடித்தால் மட்டுமே இவ்விடயத்தில் பொது மக்கள் ஆரோக்கியமாக வாழலாம்.

## இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 24-.04-1990

நல்வாக்கு

காற்றைப் பார்ப்பவன் விதைக்க மாட்டான்; மழை மேகங்களைக் கருதுபவன் அறுவடை செய்ய மாட்டான்.


-பைபிள்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

# குருநகர் விளையாட்டுக்கழக 'சி' அணி

# 'முரசொலி' கேடயத்தைத் தட்டிக்கொண்டது

புத்தாண்டு தின 'முரசொலி' வெற்றிக் கேடய செய்திகளும் படங்களும்.



பிரதம விருந்தினரான 'முரசொலி' ஆளுநர் நாயகம் திரு. எம். சிவராஜாவை இறுதிப் போட்டியில பங்குபற்றிய அணியினர் மைதானத்தில் வரவேற்கிறார்கள்,



இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட அணிகளை முரசொலி' ஆளுநர் நாயகம திரு. எம். சிவராஜாவுக்கு அணித்தலைவர்கள் அறிமுகம் செய்து வைக்கின்றனர்.

## விளையாட்டுச் செய்திகள்

'முரசொலி' ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினுல், சுதேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றிய உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் குருநகர் விளையாட்டுக் கழக C பிரிவு அணிசாம்பியனாக தெரிவு செய்யப்பட்டு முரசொலி சுழல் வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

13 அணிகள் பங்குபற்றிய இப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் ஆட தகுதி பெற்ற பாஷையூர் சென் அந்தனிஸ் அணி ஆட்டத்தில் கலந்து கொள்ள விரும்பாததினுல் குருநகர் விளையாட்டுக் கழக 'C' பிரிவு அணி இறுதி ஆட்டத்தில் ஆடாமலேயே சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

இறுதிநாள் அன்று நடைபெற்ற கண் காட்கி ஆட்டத்தில் குருநகர் விளையாட்டுக் கழக 'B' பிரிவு அணி சாம்பியன் அணியான குருநகர் 'C' பிரிவுடன் மோதியது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முதல் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முரசொலி ஆளுனர் நாயகம் திரு. எம். சிவராசா அவர்கட்கு இரு அணி வீரர்களும், மத்தியஸ்தர்களும் கப்ரின் D A.M குணசிங்கத்தினுல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்த இப்போட்டிக்கு திரு A தேவராசா நடுவராகவும் துணை நடுவர்களாக அந்தோனிப்பிள்ளை வின்சன் 'எஸ்களியூட் ஆகியோரும் கடமையாற்றினர்கள்.

போட்டிகள்யாவும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இப்போட்டி சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் முரசொலி தனது இதய பூர்வமான நன்றியை இதயத்தால் தெரிவிக்கின்றது.



இறுதிப் போட்டிகளில் பங்குபற்றிய குருநகர் விளையாட்டுக்கழக C அணியும்,B அணியும் அணிவகுத்து நிற்கும் காட்சி.

★ ★

### சாம்பியன் அணி வீரர்கள் பட்டியல்

ச. றேபேட்டுகனடி-அணித் தலைவர் ம. கிங்ஸ்ரன் - உப தலைவர் - (அணியின் கோல் காப்பாளரும் இவரே)
ப.ம கேந்திரன்
யோ. டார்வின்
இ. பூக்குஞ்சு
லீ. மேர்வின்
பி. கொன்ஸ்ரனன்ரையின்
அ. லயினர்
தே. அமலதாஸ்
அ' ஸ்ரனிஸ்லொஸ்
அ. லடிஸ்
கழகத் தலைவர் - அ. யேசுதாசன் செயலாளர் - ஊியிஸ் அன்ரனி

இப்போட்டி நடைபெற்ற அதேநேரம், மத்திய கல்லூரி மைதானத்தில் தேசிய புத்தாண்டு விழாவை முன்னிட்டு யாழ்.உதவி அரசாங்க அதிபர் பிரிவினுல் நடாத்தப்பெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

15 ம் திகதி சமய அனுஷ்டானங்களோடு நிகழ்ச்சி ஆரம்பமாகியது. முதலாவது இடம்பெற்ற ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாநகர சபை ஆணையாளர் திரு.பொ.பாலசிங்கம் சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியை யாழ். உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளை அவர்கள் தொடக்கி வைத்தார்.

மரதன் ஓட்டப்போட்டியை யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி K ஏகாம்பரம் தொடக்கி வைத்தார். ஏனைய பல போட்டிகளும் அங்கு இடம்பெற்றன

# செய்தி மஞ்சரி

## மீண்டும் சேவை தேவை

குறிக்கட்டுவானுக்கும், நெடுந்தீவுக்கும் இடையில் நடாத்தப்பட்டு வந்த இயந்திரப் படகுச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கும், வேறு இடங்களுக்கும் பிரயாணம் செய்யும் நெடுந்தீவு மக்கள் பல வித கஷ்டங்களுக்கு உள்ளாகியிருப்பதால் அவற்றை கவனத்தில் எடுத்து மக்களின் நன்மை கருதி மீண்டும் இச்சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட எம் பி. இ. கே. நவரத்தினம் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜயபால மென்டிசை கேட்டுள்ளார்.

## ஊழியர் நலன் கருதி

மக்கள் மயமாக்கப்பட்ட நிறுவனங்களின் 10 சத வீத பங்குகள் பணம் அறவிடாது அந்த நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்க அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.

ஊழியர்களுக்கு வழங்கப்படும் இந்தப் பங்குகளுக்கான விலையை அரசாங்கமே செலுத்தும். இவ்வாறு பங்குகள் வழங்கப்படுவதனால் ஊழியர் சேவைக் காலப் பணம், ஊழியர் சேமலாப நிதி, மற்றும் இடைக் கால ஒய்வு, நஷ்ட ஈடு ஆகியவற்றை இழக்க நேரிடாது. இவற்றிற்கு புறம்பாகவே இந்த இலவச பங்குகள் வழங்கப்படும். ஜனாதிபதி திரு ஆர். ஆர். பிரேமதாஸவின் சிபார்சின் பேரிலே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## முச்சக்கரவண்டி வழங்கப்பட்டது

சமூகசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகளை வழங்கும் வைபவம் வாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அரசாங்க அதிபர் திரு. வரதராஜன் தலைமையில் நடடபெற்றது.
பெற்றது.

மீராவோடையைச் சேர்ந்த ஜனாப் உதுமா லெப்பை கிண்ணியடியைச் சேர்ந்த செல்வன் சி. மகேந்திரராஜா ஆகியோருக்கு இம் முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (5)

## கரடியனறு கல்லூரி திருத்தம்

மட்டக்களப்பு கரடியனாறு விவசாயக் கல்லூரி ஜேர்மன் சமஷ்டி குடியரசின் நிதியுதவியுடன் திருத்தியமைக்கப்படும்.

இக்கல்லூரியில் கடந்த சில வருடங்களாக இராணுவம் முகாமிட்டிருந்ததால் முடப்பட்டிருந்தது தெரிந்ததே.

## அணைக்கட்டு வேலை பூர்த்தி

குரான் புல் அணைக்கட்டு வேலைகள் ஒருவார காலவேலையின் பின் நிறைவுபெற்றுள்ளன. ஏறாவூர் விவசாயிகளின் கோரிக்கையை அடுத்து வந்தாறுமூலை விடுதலைப்புலிகள் அமைப்பாளர் சுரேஷ் (பிரசன்னா) மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இந்தஅணைக்கட்டு நிறைவு பெற்றுள்ளதாகவும் இதனால் சுமார் 1000 க்கும் மேற்பட்டவிவசாயிகள் நன்மைபெறுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பிரதேச விவசாயிகள் ஊக்கமும் இதுவிடயத்தில் பாராட்டப்படுகின்றது.

## சீனி கடத்தல்

தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபா பொறுமதியான 425 தொன் பழுப்பு சீனி மர்மமாக கடத்திச் செல்லப்பட்டுள்ளது. பரிசோதனைக்காக இச்சீனியின் மாதிரி எடுக்கப்பட்ட பின்னர் தடுத்து வைக்கப்பட்ட ஒருமணி நேரத்திற்குள் சுங்க அதிகாரிகளை ஏமாற்றிவிட்டு துறை முகத்திலிருந்து களவிடப் பட்ட இந்த சீனி கசிப்பு காய்ச்சுவதற்காக விற்கப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளது.

## அதிபர் நேர்முகப் பரீட்சை

இலங்கைப் பாடசாலை அதிபர் சேவையில் இரண்டாம் தரத்திலுள்ள அதிபர்களை பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்காத அதிபர்கள் இம்மாதம் 25 ம் திகதி காலை நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கலாம்.

## பொலிஸ் விரைகிறது

குண்டுப் புரளிக்குத் தொடர்ந்து இலக்காகி வரும் எயர் லங்கா விமானங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக இரகசியப் பொலிஸ் கோஷ்டி ஒன்று துபாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டது. லண்டனில் இருந்து துபாய் வழியாகக் கொழும்பிற்கு வரும் எயர் லங்கா விமானங்களில் இவ் குண்டுப் புரளிக்கு இலக்காகுவதால் குண்டு நிபுணர்களாலும், மோப்பநாய்களாலும் விமானத்தில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின் இச் செய்தி வெறும் புரளி எனத் தெரிய வந்துள்ளது.

## சகலருக்கும் அனுமதி

தகுதி பெற்றிருந்தும், இட வசதியின்மையினால் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ளாது விடப்படும் சுமார் 12 ஆயிரம் மாணவர்கள் அடுத்த வருடம் முதல் பிரதேச பல்கலைக் கழகங்களில் சேர்க்கப்படவுள்ளார்கள். (பாடசாலைக் கட்டிடங்களிலே இப்பிரதேசப் பல்கலைக்கழகங்கள் மாலை நேரங்களில் நடத்தப்படவிருக்கின்றது.

# விடிவு கிடைக்கும்வரை எமது வீரப் போராட்டத்திற்கு முடிவில்லை

## -மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்

உறுதிமிக்க எமது தலைவரின் போர் தந்திரத்தினாலும் போராளிகளின் அற்புதமான தியாகத்தினாலும், மக்கள்எமது இயக்கத்தின் மீதுவைத்திருந்த நம்பிக்கையின் காரணமாகவும் எமது பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இந்திய ஆக்கிரமிப்பு படையினை விரட்டி அடித்துள்ளோம். இந்திய ஆக்கிரமிப்பு படை எமது பகுதிகளிலிருந்து வெளியேறக் கூடாது என்று ஆர்பாட்டம் செய்தவர்கள் ஆக்கிரமிப்புப் படைவெளியேறமுன்பு எமது மண்ணைவிட்டு வெளியேறினார்கள்

"இவ்வாறு வவுனியா மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் பொறுப்பாளர் செல்வி ரதி வவுனியா நகரசபை முன்றலில் அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு எழுச்சி விழாவில் பேசுகையில் தெரிவித்தார்,

திருமதி சீதாதேவி பொன்னையா தலைமையில் இந்த எழுச்சிவிழா நடைபெற்றது.

செல்வி ரதி மேலும் தனது உரையில் எமது மண் நசுக்கப்பட்டும் எமது மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட வேளை அதனை உணர்வு பூர்வமாக புரிந்து கொண்ட யுவதிகள் எமது முன்னணிக்கு பொரும் திரளாக வந்துள்ளனர். இளையவர்கள் மட்டுமல்ல முதியவர்களும் எமது போராட்டத்தில் பங்களிப்பு செய்துள்ளார்கள் என்பதற்கு அன்னை பூபதி உணர்வு பூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

எமது தேசத்தினை பல தடவைகள் அன்னிய ஆட்சியாளர்கள் எமது மக்களையும் மண்ணையும் அடக்கி ஆண்டு வந்துள்ளார்கள்.

பண்டாரவன்னியன் அன்னியனுக்கு அடிபணிய மறுத்து வீரமரணம் அடைந்தான்.

அடக்கி ஆளப்பட்ட எமது இனம் அகிம்சை போராட்டத்தில் பல தடவை ஈடுபட்டது. ஆனால் உரிமைகள் கிடைக்கவில்லை.

இதனால் எமது உரிமைகளை பெறுவதற்காகவே நாம் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

எமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை போராடிக் கொண்டே இருப்போம் 1987 ம் ஆண்டு ஒப்பந்தம் அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்திய இராணுவத்தினை எதிர்த்து வெற்றி கண்டுள்ளோம் "எனவும் தெரிவித்தார். (11)

வட-கிழக்கு மாகாணங்களில்

## மேதினக் கொண்டாட்டத்திற்கு பெரிய அளவில் ஏற்பாடு

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் மேதினக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் இப்பொழுதே ஆரம்பமாகிவிட்டன.

மேற்படி கொண்டாட்டங்களின் போது பெருமளவில் வாகன அலங்காரங்களும், சுலோக அட்டைகள் ஊர்வலங்கள், தெருக்கூத்துக்கள், வில்லுப்பட்டுக்கள் போன்றவை விசேடமாக இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றன.

இவ் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் இருந்து பெருமளவில் தயாராகக் கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மேற்படி கொண்டாட்டங்களில் வெளிநாட்டுப் பிரமுகர்களும் கலந்து கொள்ளலாம் எனவும் நம்பப்படுகின்றது. (39)

## கலாவண்ணன் முதலிடம்

தீவுப்பகுதி பாடசாலைகளிடையே இம்மாதம் 11ம் திகதி வேலணைக் கல்விக் கோட்டம் நடத்திய தமிழ் மொழித்தினப் போட்டிகளில் பிரிவு இரண்டுக்கான பேச்சுப் போட்டியில் மண்டைதீவு மகாவித்தியாலய 6ம்வகுப்பு மாணவன் செல்வன் சோ. கலாவண்ணன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படி தமிழ் மொழித்தினப் போட்டிகள் வேலணைசேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. (33)

வெளிநாட்டு அதிகாரிகள் நேரடி விஜயம்

## வன்செயலில் பாதிக்கப்பட்டோர் நிவாரண நிதியில் மோசடி

வடக்கு கிழக்குப் பகுதிகளில் வன்செயலினால் பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணம்வழங்குவதற்காக வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட நிதியை இங்குள்ள சில நிறுவனங்கள் மோசடி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது

தாம்வழங்கிய நிவாரண நிதி ஒழுங்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறியவே தற்போது வடக்குகிழக்குப்பகுதிகளுக்கு வெளிநாட்டு அதிகாரிகள் நேரடிவிஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் மேலும் பல வெளிநாட்டு அதிகாரிகள் இங்கு விஜயத்தை மேற்கொண்டு தமது நிதி ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாஎன்பதை நேரடியாக அவதானிக்கவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில்

## வீதி கட்டிட, அமைப்புக்கு 18 இலட்ச ரூபா நிதி ஒதுக்கீடு

புனர் வாழ்வு, புனரமைப்பு நிதியிலிருந்து 1989/90ம் ஆண்டுக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதி அமைப்பதற்கும் கட்டிடங்கள் திருத்துவதற்கும்பதினெட்டு இலட்சம் ரூபா வரை ஒதுக்கப்பட்டுள்ளது.

விபரம்:- கொட்டோடை வீதி, 75,000 ரூபா நாகர் கோயில் பஸ் போகும் கடற்கரை வீதி 75,000 ரூபா குடத்தனை வடக்கு வீதி, 175,000 ரூபா அம்பன் பிள்ளையார்—முருகன் வீதி 90,000 ரூபா ஆழியவளை பாடசாலை வீதி, ரூபா 400,000 ரூபா ஊரிக்காடு-ஆழியவளை வீதி 60,000 ரூபா உடுத்துறை மகாவித்தியாலய வீதி 70,000 ரூபா, வடலியடி வீதி 60,000 ரூபா செம்பியன்பற்று — தனிப்பனை வீதி 50 000 ரூபா குடத்தனை உப-அலுவலகக் கட்டடம் 90,000 ரூபா.

இவ்வீதி வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ஆ. அ. நடராசா செய்து வருகிறார்.

இவ்வீதிகள் திருத்துவதன் மூலம் கடற்கரைக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் பஸ் வண்டி செல்லும் பிரதான வீதிக்குச் செல்வது சுலபமாயிருக்கும்.

## முரசொலிச் செய்தியால் நாவலர் சிலைக்கு விடிவு

கோப்பாய் நாவலர் இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் பொதுமக்களின் உதவியுடன் கடந்த நான்கு ஆண்டுகட்கு முன்னர் அமைக்கப்பட்ட ஆறுமுக நாவலரின் சிலை இதுவரை திறக்கப்படவில்லை என நேற்றைய முரசொலியில் செய்தி வெளியிட்டிருந்தோம் அல்லவா?

இச் செய்தியை அடுத்து யாழ் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் உடனடியாக இந்த நாவலர் சிலையைத் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அதிபருக்கும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்திற்கும் உத்தரவிட்டுள்ளார். பாடசாலை ஆரம்பமானதும முதல் வரும் நல்ல நாளில் நாவலர் சிலைத் திறப்பு விழா வைபவம் இடம்பெறும் எனக் கல்விப் பணிப்பாளர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

## வெற்றிலைக்கேணி பஸ்சேவை

மக்கள் வசிக்காத பகுதிக்கூடாக பஸ்சேவை நீடிக்கப்படுவதற்கு வடமராட்சி கிழக்கில் உள்ள பொது ஸ்தாபனங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றன.

உத்தேசிக்கப்பட்டுள்ள யாழ்-ஆழியவளை பஸ்சேவை வெற்றிலைக்கேணி வரை நீடிக்கப்பட இருப்பதாகத் தெரியவருகின்றது மேற்படிபஸ்சேவை மக்கள் வதியும் ஆழியவளை வெற்றிலைக்கேணி கடற்கரை-வீதிகளைத் தவிர்த்து மக்கள் எவரும் வசிக்காத மருதடி வீதியினூடாக நடாத்தப்படுவதற்குமுயற்சிகள்எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

எனவே வெற்றிலைக்கேணிக்கு பஸ்சேவை நீடிக்கப்படும் பட்சத்தில் அது பொதுமக்களுக்கு பிரயோசனப்படும் வகையில் ஆழியவளை-வெற்றிலைக்கேணிகடற்கரை வீதியினூடாகநீடிக்கப்படுவதற்குஆவனசெய்யும்படி வெற்றிலைக்கேணி கிராம அபிவிருத்திச்சங்கம், ஆழியவளை கிராமஅபிவிருத்திச்சங்கம் மற்றும் பொதுஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளன. (43

★ தென்னிலங்கை சமாதானக் குழுவினருடன் ஒரு சந்திப்பு ★

# இளம்போராளிகளின் தியாகம் மெய்சிலிர்க்க வைக்கிறது

புது வருடம் பிறந்ததினம் பகல் பதினெரு மணியிருக்கும் 'முரசொலி' அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

'முரசொலி' பாதுகாப்பு உத்தியோகஸ்தர் அவசர அவசரமாக ஆசிரிய பீடத்திற்குள் நுழைகிருர்... தென்னிலங்கையில் இருந்து ஒரு மினி பஸ்ஸில் ஜெத்தாராம விகாராதிபதி வண. பி. பாலித தேரோ தலைமையில் சமாதானக்குழு வந்திருக்கும் செய்தியைச் சொல்கிருர்.

சமாதானக் குழுவினர் உள்ளே நுழைகின்றனர். 'முரசொலி' ஆசிரியருக்கும் செய்தி



செய்தி ஆசிரியருடன்

ஆசிரியருக்கும் மற்றும் ஆசிரிய பீடத்தில் உள்ள ஏனைய உதவி ஆசிரியர்களுக்கும் வணக்கம் கூறி தங்களை அறிமுகம் செய்கின்றனர்.

சமாதானக் குழுவினரின் வதனங்களைப் பார்க்கிருேம் வதனங்களில் பயம்குடிகொண்டிருப்பதை சுலபமாக அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களது பயப்பீதியை நீக்க அவர்களுடன் நாமும் மனம்விட்டு உரையாடுகிருேம்.

1983க்குப் பின்னர் தென் இலங்கையிலிருந்து வருகின்ற முதலாவது சமாதானக் குழுவினரை 'முரசொலி' வாசகர்களுக்காக பேட்டிகாண விரும்பினுேம். ஜெத்தாராம விகாராதிபதியிடம் உங்கள் வடபகுதிப் பயணத்தைப் பற்றிச் சொல்லுங்கள் என்றவாறு நாசூக்காகப் பேட்டியை ஆரம்பித்தோம்.

நாம் நயினுதீவு நாகவிகாரைக்குச் சென்று தரிசிப்பதுடன் யாழ்ப்பாணத்தையும் சுற்றிப்பார்க்க விரும்பினுேம். அத்தோடு நின்றுவிடாமல் போராளிகளோடும் மனம் விட்டு உரையாடி அவர்களது கருத்துக்களையும் அறியவிரும்பினுேம்.

வடபகுதிக்கு வரும்போது உங்கள் உள்ளத்தில் எப்படியான உணர்வு ஏற்பட்டது என்று விகாராதிபதியிடம் கேட்க. பயம் எங்களை வாட்டி வதைத்தது. நாம் இயக்கச்சிக்கு வரும்போது போராளிகள் எங்களை இயக்கச்சியில் மறித்து விசாரித்தார்கள்.


நாம் தென்னிலங்கையில் இருந்து வரும் சமாதானக் குழுவினர் என்று சொன்னபோது, தாங்கள் பத்திரிகை மூலம் எமது வருகையைமுன் கூட்டியே அறிந்து கொண்டதாக அவர்கள் கூறினுர்கள்.

போராளிகளே உங்களுடன் உரையாட விரும்புகின்ருேம் என்று எமது விருப்பத்தைத் தெரிவித்தபோது மறுப்பு எதுவும் சொல்லாமல் இன் முகத்தோடு எம்முடன் உரையாடினுர்கள். அப்பகுதி போராளிகளின் தலைவருடனும் எமக்கு உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிருேம்.

போராளிகளைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று கேட்டபோது; வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் அறிவு வளர்ச்சியையும், ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் கண்டு வியந்தோம். அன்பாகப் பழகி, உரையாடும் பாங்கு அவர்களுக்கே தனித்துவமானது. அவர்களதுதியாக உணர்வை நாம் மதிக்கின்ருேம் போற்றுகின்ருேம்.

போராளிகளினதும் இலங்கை அரசினதும் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். தமிழரும் சிங்களவர்களும் சகோதரர்களாக வாழ வேண்டும், ஒருவரை ஒருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலைமை மாற வேண்டும்.

தென்னிலங்கை மக்களுக்கு வடபகுதி விஜயத்திற்குப் பின்னர் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள் என்றுஜெத்தாராம விகாராதிபதியிடம் கேட்டபோது; பத்திரிகை வானெலிச் செய்திகள் கூறுவதை முற்று முழுதாக நம்பிவிடக்கூடாது. என்பதை வலியுறுத்துவதோடு தமிழர்களின் அன்பான உபசரிப்பையும், அவர்களது தியாக உணர்வையும் எடுத்தியம்பப் போகின்ருேம் என்ருர்.



சமாதானக் குழு

வடபகுதி விஜயம் உங்களுக்கு எக்கருத்தை உணர்த்தி நிற்கின்றது என்று விகாராதிபதியிடம்கேட்டோம்: அதற்கு அவர் வீதி எங்கும் தோரணங்களைக் காண முடிந்தது. இது ஏன் என்று கேட்டோம். அன்னை பூபதிக்கு அஞ்சலி என்ருர்கள். தமிழர்களின் ஒற்றுமையை தோரணங்கள் எமக்கு உணர்த்தி விட்டன என்று புன்சிரிப்புடன் கூறினுர்.

அழுத்கடை கிராமோதய சபைத்தலைவர் சுனில் செனரத் கருத்து வெளியிடுகையில்: நயினுதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டோம். அங்கு நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டதோடு குருக்களின் ஆசியையும் பெற்ருேம் புத்தாண்டில் நாம் பெற்ற ஆசியை பெருமையாக மதிக்கிருேம்.

நாம் வரும்போது பயத்துடனே வந்தோம் இங்கு வந்த பின்புதான் வீணுகப்பயந்தோம் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டோம்.

பயப்பீதியால் பெண்களை நாம் அழைத்து வரவில்லை.

**"போராளிகள் வயதில் குறைந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் அறிவு வளர்ச்சியையும் ஒழுகக் கட்டுப்பாட்டையும் கண்டு வியந்தோம அவர்களது தியாக உணர்வை நாம் மதிக்கிருேம் போற்றுகிருேம்."**

—ஜெத்தாராம விகாராதிபதி
வண. பி. பாலிததேரோ

மறுமுறை வரும் வாய்ப்புக் கிடைத்தால் எமது பயணத்தில் பெண்களும் இணைந்து கொள்வார்கள்.

ராணுவத்தில் நல்லவர்களும் இருக்கிருர்கள், கெட்டவர்களும் இருக்கிருர்கள். தீயவர்கள் விட்ட தவறை வைத்துக் கொண்டு சிங்கள மக்கள் அனைவரும் துவேச மனப்பான்மை உடையவர்கள் என்று முடிவு எடுத்துவிடக் கூடாது. நாம் திறந்த மனதுடன் தான் இங்கு வந்திருக்கிருேம்.

'ரைம்ஸ் ஒப் சிலோன்' தாபனத்தாரின் சிங்கள பத்திரிகையான 'லங்கா தீப' பத்திரிகையில் உதவியாசிரியராக முன்னர் கடமையாற்றிய லோகஹா லியனகே கருத்து வெளியிடும்போது: சிங்களவர் தமிழர் என்ற வேறுபாடு நீங்க வேண்டுமானுல் இரு சாராரும் இருமொழிகளையும் படிக்க வேண்டும். இதனை உடனடியாகச்செய்து விட முடியாது எதிர்காலத்தில் இப்படியான நிலைமை ஏற்படாதிருக்கச் சிறுவயதில் இருந்தே இரு மொழிகளையும் கற்பிக்க வேண்டும். மனம்விட்டு இரு சாராரும் உரையாட இதுவே சிறந்த வழியாகும் என்ருர்.

றேயல் பிலிம்ஸ் நடிகர் டெனிஸ் கருத்து வெளியிடுகையில் 'கொட்டி வலிகே' (புலியின் வால்) என்ற படத்தை ஆறுமுறை பார்த்தேன். இதைப்பார்த்த பின்பு யாழ்ப்பாணம் வரவேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற கதை அமைப்புடன் கூடிய பக்கச்சார்பற்ற படங்களைத் தயாரிக்க வேண்டும் என்பதே எனது ஆசையாகும். என்று தெரிவித்ததோடு றேயல் பிலிம்ஸ்ஸைச் சேர்ந்த மூன்று பேர் இத்தூதுக் குழுவில்இடம் பெற்றிருக்கின்ருேம் என்ற தகவலையும் தெரிவித்தார்.



ஆசிரிய பீடத்தில் ஆசிரியருடன்

றேயல் பிலிம்ஸ் தயாரிப்பாளர் அனுரா அபயசேகரா எம்முடன் உரையாடுகையில் பயப்பீதியுடனே நாம் வடபகுதிக்கு பயணத்தை மேற்கொண்டதால் திரைப்படகமரு எதனையும் கொண்டு வரவில்லை அதனைக் கொண்டு வந்திருந்தால் தமிழர்கள் பட்ட துயரங்களைப் படம் பிடித்து நாம் தயாரிக்கின்ற படங்களில் சேர்த்து உண்மை நிலையைச் சிங்கள மக்களுக்கு விளக்கியிருக்கலாம். சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தவறிவிட்டோம் என வேதனைப்பட்டார்.

அத்தனகலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறி சுமத் (மாளிகாவத்தை கிராம சேவையாளர்) யாழ் பயணம் பற்றி உற்சாகத்தோடு கூறுகையில் எனது குடும்பத்தாருக்கு அனுராதபுரத்திற்கு சமயயாத்திரை போகின்றேன் என்று பொய் சொல்லிவிட்டுத்தான் இங்கு வந்தேன்.



கட்டுரையாளருடன்

எனது சகோதரனுன சுனில் சந்திரசிறி விமானப்படை வீரராக இருந்தபோது மட்டக்களப்புச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டார்.

இதனுல் வடபகுதிக்கு போகின்றேன் என்று சொன்னுல் எனது குடும்பத்தவர்கள் போகவிடாது தடுத்து விடுவார்கள். அவ்வளவு பயம் அவர்களுக்கு.

எனது தம்பி கொல்லப்பட்டுவிட்டான் என்பதால் தமிழர்கள் மீது எனக்கு வெறுப்பு என்று நினைத்துவிடாதீர்கள் நான் இனக்கலவரத்தின் போது அத்தனகலையில் பல தமிழ் குடும்பங்களைக் காப்பாற்றியிருக்கின்றேன்.

எனவே எல்லோரையும் ஒரேவிதமாக எடைபோட்டு விடக்கூடாது. வடபகுதிக்கு வந்த பின்னர்தான் வடபகுதி மக்களின் அன்பு பற்றி அவர்களின் துயரங்கள் பற்றியும் நாம் தெரிந்து கொண்டோம் இங்கு வராவிட்டால் எமக்கு மற்றவர்கள் சொல்வது தான் தேவ வாக்காக இருக்கும்,

புது வருட தினத்தில் வடபகுதியில் புதிய அனுபவத்தைப் பெறுவதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இது ஒருவித்தியாசமான அனுபவம். நாம் காண்பது கனவா என்று நினைக்கத் தோன்றுகிறது.

1983 க்குப் பிறகு வடபகுதிக்கு வரும் முதலாவது சமாதானக்குழு என்ற பெருமை எமக்கே உண்டு என்று உணர்ச்சி பொங்கக் கூறினுர்.

மூன்று மணிநேரம் எமது அலுவலகத்தில் தென் இலங்கை சமாதானக் குழுவினர் தங்கி இருந்தனர். இவர்களை அழைத்து வந்தவர் வேலணைக் கவிஞர் வேணியன் என்பது சுட்டிக்காட்டுதற்குரியது.

வடபகுதிக்கு இன்னும் பல சமாதானக்குழுக்கள் வர இருப்பதாக இச் சமாதானக் குழுவினர் தெரிவித்தனர்.

வடபகுதி விஜயம் அவர்களின் இதயத்தை நெகிழ வைத்திருக்கும் பயத்துடனும் கலக்கத்துடனும் பயணத்தை வடபகுதி நோக்கி ஆரம்பித்தவர்கள் பயமின்றித் தெளிவான சிந்தனையோடு தென் இலங்கை செல்கின்றனர்.

தென் இலங்கையில் உள்ளவர்கள் உண்மை நிலைமைகளை தெரிந்து கொள்ள சமாதானக் குழுவினரின் விஜயம் உதவுமாக இருந்தால் வரவேற்கக் கூடிய 'பயணம்' என்றே கூறலாம். ●

பேட்டி கண்டவர்

**வி.என்.எஸ். உதயசந்திரன்**

## நம்மைச் சுற்றி நடப்பவை

நேற்றுக் காலை எமது அலுவலகத்திற்குக் கைதடியைச் சேர்ந்த ஒருவர் அரை றாத்தல் பாணுடன் வந்தார். இந்தப் பாணைப் பாருங்கள் பாணின் நிறை குறைவு என்றாலும் பரவாயில்லை, பாண் அவியாமல் இருக்கிறது என்றார். பாணை நாம் தராசில் போட்டுப் பார்த்தபோது 152 கிராம் நிறையைக் காட்டியது. நிறை குறைந்த பாண் விற்பது தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவித்தாலும் பேக்கறிக்காரர்கள் திருந்துவதாக இல்லை.........

பாண் பிரச்சினையும் இப்போது குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளில் ஒன்றாகவே மாறிவிட்டதா?

கிறிசன்

### மட்டு. கிராமசேவை அலுவலர்கள்

# வாரத்தில் இருதினங்கள் அலுவலகத்தில் இருக்கவேண்டும்

கிராம சேவை உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களில் வெள்ளி, திங்கள் ஆகிய இருதினங்களிலிருந்து பொதுமக்களைச் சந்திக்க வேண்டும். பொதுமக்கள் கிராம சேவை உத்தியோகத்தரைத் தேடி அலையும் நிலையை ஏற்படுத்தக் கூடாது.

இவ்வாறு மட்டு. மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் இணைப்பாளர் திரு விசு அண்மையில் வவுணதீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டம் ஈச்சந்தீவு தமிழ் கலவன் பாடசாலையில் ஈச்சந்தீவு விடுதலைப்புலிகள் பொறுப்பாளர் ரவி தலைமையில் நடைபெற்றது.

வவுணத்தீவுப் பகுதியில் வீடமைப்புத் திட்டங்கள் போதியளவு உருவாக்கப்படவில்லை எனவும் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு மாதாந்த வாடகையாக 30 ரூபா மட்டுமே வழங்கப்படுவதாகவும் இது அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கிராமசேவை உத்தியோகத்தர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (05)

# 20 அதிகாரிகள் சகிதம் தேவராஜ் யாழ் விஜயம்

இந்துசமய கலாசார, விவகார ராஜாங்க அமைச்சர் திரு பி. பி தேவராஜ் 20 அதிகாரிகள் சகிதம் எதிர் வரும் வியாழக்கிழமை அதிகாலை ரயில் மூலம் யழ்ப்பாணம் வருகிறார். ராஜாங்க அமைச்சர் என்ற வகையில் அவரது முதலாவது விஜயம் இதுவாகும்.

ஐந்து நாட்கள் இங்கு தங்கவுள்ள ராஜாங்க அமைச்சர் இக்கால கட்டத்தில் அநேகமாக எல்ல யாழ் சைவக் கோவில்களுக்கும், யாழ் பல்கலைக் கழகத்திற்கும் விஜயம் செய்வார்.

பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு முதலில் விஜயம் செய்வதன் மூலம் கோவில்களுக்கான தனதுயாத்திரையை அவர் ஆரம்பிப்பார்.

## சுவையான செய்திகள்

### நிலாவே வா-செல்லாதே வா!

சந்திரன் பூமியை விட்டுச் சிறிது சிறிதாக விலகிச் செல்கின்றதாம். ஒவ்வொரு வருடமும் சந்திரன் பூமியிலிருந்து நான்கு செண்டி மீட்டர்கள் வீதம் விலகிச் செல்வதாகச் சில ரஷ்ய விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். லேசர் முறை மூலம் அவர்கள் இதைக் கணக்கிட்டுள்ளார்கள். சந்திரனுக்குப் பூமிமீது அப்படி என்ன வெறுப்போ?

### இரட்டையர் வம்சாவளி

அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தில் ஆலிகிராப் ஹிங், மாகி கிராப்லாம் பட்டி என்ற இரு சகோதரிகள் இரட்டையராகப் பிறந்து 103 ஆண்டுகள் முடிந்து விட்டன. இரட்டையர்கள் உலகிலே அபூர்வம் என்கின்றது விஞ்ஞானம். இந்த இரட்டை மூதாட்டிகளின் வழி வந்த வம்சங்கள் இதுவரை 130 மனித உயிர்களை உற்பத்தி செய்துள்ளன. இந்த வம்சாவளியில் வேறு இரட்டைப்பிறவி ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வாழ்வும் வாரமும்

அமெரிக்காவின் புகழ் மிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் பிறந்தது ஒரு ஞாயிற்றுக்கிழமையில், அலுவலகத்தில் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்ட நாள் திங்கட் கிழமை, ஜனாதிபதியானது செவ்வாய்க் கிழமை, செனட் பாரில் நுழைந்தது புதன் கிழமை புகழ் பெற்ற 'கெட்டிஸ் பேர்க்' சொற்பொழிவை நிகழ்த்தியது. வியாழக்கிழமை, இறுதியில் ஒரு வெள்ளிக்கிழமையன்று சுடப்பட்டு சனிக்கிழமையன்று தன் உயிரை நீத்தார்.

# புரிந்துணர்வுடன் ஆழ் கடலில் தொழில்புரிய வேண்டியதவசியம்

### --இந்திய மீனவரிடையே மன்னார் அரச அதிபர்

''இலங்கை-இந்திய மீனவர்கள் புரிந்துணர்வுடன் அனுசரித்து ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவேண்டும்'' என்று மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் தலைமன்னார் கடலில் 12 இயந்திர வள்ளங்களுடன் புலிகள் இயக்கத்தினரிடம் பிடிபட்ட 57 இராமேஸ்வரம் மீனவர்களையும் வழியனுப்பும் வைபவம் பேசாலையில் நடைபெற்றபோது பேசுகையில் கூறினார்.

''ஏற்கனவே பல வழிகளில் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேச மீனவர்கள் இந்திய மீனவர்களினாலும் பாதிப்படையும் நிலை தோன்றக்கூடாது'' என்றும் அவர் வற்புறுத்தினார்.

மன்னார் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு லக்ஷ்மணனும் சமூகமளித்திருந்தார்.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் இம்மாவட்டத்தில் சிறு மீனவர்கள் மானிய உதவியின் கீழ் சிறு வலைகள் வள்ளங்களைக் கொண்டு தொழில் புரிகின்றனர். இந்நிலையில் இந்திய மீனவர்களது இழுவைப் படகுகள் வலைகளை அறுத்து சேதம் விளைவிக்கின்றன. இந் நட்டத்திலிருந்து மீள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இனிமேல் இப்படி இடம்பெறாமல் இரு பகுதியினரும் புரிந்துணர்வுடன் தொழில் நடத்த வேண்டும்'' என்றார்.

திரு லக்ஷ்மணன் தனது உரையில் ''ஒரே இனத்தவர்களான, தமிழர்களான நாம் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். நமது சிறு மீனவர்கள் இழுவைப்படகுகள் இங்கு வருவதால் பெரும் நட்டமடைகின்றனர். அவர்களின் புகாரின் காரணமாகவே இங்கே உங்களை அழைத்து வந்து விசாரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது இனிமேல் எமது மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது மிகவும் நட்புறவுடன் வழியனுப்புகிறோம்' என்றார்.

# ஊற்றுப்புலத் திட்டத்தில் சி.க.கூட்டுறவுச்சங்கம் அமைப்பு

ஊற்றுப்புலக் குடியேற்றத் திட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வாரம் ஊற்றுப்புலத்தில் நடைபெற்றுப் புதிய நிர்வாக சபையும் அங்கு தெரிவு செய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக திரு சி. இராசையா செயலாளராக திரு என். ரங்கநாதன், பொருளாளராக திரு. ஐ. சின்னையா ஆகியோரும் தெரிவாகினர்.

வைபவத்தில் கலந்து கொண்டுஉரையாற்றிய பேராசிரியர் திரு, கா. சிவத்தம்பி ''தாம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடியவர் என்று கருதப்படுபவர்க்கே சிக்கனக் கடனுதவு சங்கம் கடன் வழங்கும். இவ்வாறு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்கள் என்று புறக்கணிக்கப் பட்டவர்களை நாமே ஒன்று சேர்த்து சங்கமமைத்து முன்னேற்றிய நிகழ்வும் உண்டு. அதே போல் நம்பிக்கை மிகுந்தவர்களாகக் கருதப்பட்டு லட்சக்கணக்கில் கடனைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தாமல் பிணையாளர்கள் கடனாளிகளைத் தேடி அலையும் நிகழ்வும் நடைபெற்றுள்ளது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் திட்ட நலனுக்காக இரண்டு லட்ச ரூபாவை வைப்பிலிடும். அதன் மூலம் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுச் சேமிப்பைப் பெருக்கி முன்னேற வேண்டும்'' என்று குறிப்பிட்டார். (35)

# சுகாதார பரிசோதகர் சங்கம்

யாழ் மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கூட்டம் யாழ் ஆயுள்வேதக் கல்லூரியில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்களை யாழ் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

கட்டாக்காலி நாய்களை அழித்தல், வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பூசி போடுதல், ஜனசவியத் திட்டத்தின் கீழ் உதவி பெறுவோருக்கு சுகாதார உதவிகள் வழங்குதல் ஆகிய தீர்மானங்களே அங்கு எடுக்கப்பட்டன.

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்ற போது பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: திரு கே. எஸ். குமாரசாமி, செயலாளர்: திரு. கே. கார்த்திகேசு, பொருளாளர்: திரு. கே. வர்ணநாதன், ஏழுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (33)

# நோயாளருக்கு சிகிச்சை வழங்க காலதாமதம் ஏற்படுவதாகப் புகார்

கிளிநொச்சி அரச மருத்துவ மனையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்கள் மிகுந்த தாமதத்தின் பின்னர்தான் யாழ்ப்பாணம் அரச மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

கடந்த சில மாத காலமாக இம்மருத்துவ மனையில் சேர்க்கப்படும் நோயாளர்கள் யாழ்ப்பாணம் அரச மருத்துவ மனைக்கு சேர்ப்பதற்காக அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்ட பின்னும் பல மணி நேரத் தாமதத்தின் பின்னர் தான் வண்டி புறப்படுவதாகவும், தேவையற்ற காலதாமதம் காட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். நீண்ட நேர தாமதத்தால் நோயாளர் அதிகரித்து நோயாளர்கள் அதிக துன்பத்துக்குள்ளாவதையும், அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. (35)

# வல்வையில் அதிகாரிகள்

வல்வையில் கடந்த கால நிகழ்வுகளால் நிர்மூலமாக்கப்பட்ட கட்டிடங்களைப் பார்வையிட ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு அமைப்பு அதிகாரிகள் யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சகிதம் மூன்று வாகனங்களில் வல்வை வந்திருந்தனர்.

மேற்படி அதிகாரிகள் வல்வைப் பிரஜைகள் குழுத்தலைவர் எஸ். செல்வேந்திரா, வல்வை நகரசபைச் செயலாளர் எஸ். இராமச்சந்திரன், வல்வைப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. எஸ். ஆனந்தராஜ் ஆகியோரின் உதவியுடன் வல்வைப் பிரதேசங்களில் பாதிப்படைந்த கட்டிடங்களைப் பார்வையிட்டு விபரங்களை அறிந்தனர்.

இதன் அடிப்படையின் முதற்கட்டமாக வல்வை காய்கறிச் சந்தை மாடிக்கட்டிடம் நவீனசந்தை போன்றவற்றின் கட்டிட வேலைகள் தொடங்க உள்ளதாகத் தெரியவருகின்றது. (39)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# சயிக்கிள் இலக்கத் தகடுகள் கடதாசி போல் உள்ளன

ஆசிரியர்
முரசொலி

கிளிநொச்சிப் பிரதேச சபையால் விநியோகிக்கப் படும் சயிக்கிள் தகடுகள் கடதாசி போல் இருக்கின்றன. இதனால் ஒரு வருடத்திற்கு 3 தகடுகள் வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றோம். 5/- ரூபாத் தகடுக்கு 15/- ரூபா செலவளிக்க வேண்டியுள்ளது.

ஒரு அரசாங்க நிறுவனமே இந்த விதமான மோசடியில் ஈடுபடுகின்றது. இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

திருநகர். மா. சுப்பிரமணியம்

# இவ்வீதியை இனியாவது அதிகாரிகள் கவனிப்பார்களா?

ஆசிரியர்
முரசொலி

சாவகச்சேரியிலிருந்து வரணிக்குச் செல்லும் பிரதான வீதியாகிய டச்சு விதி பல காலமாகத் திருத்த வேலைகளின்றி குன்றும், குழியுமாக உள்ளது. இவ்வீதியாற் போக்குவரத்து பஸ் ஒன்றும் சேவையிலீடுபட்டது. ஆனால் வீதி திருத்தப்படாமையினால் மக்கள் பல கஷ்டத்தின் மத்தியில் போக்குவரத்துச் செய்கின்றார்கள். சம்பந்தப்பட்டவர்கள் வீதியையும் திருத்திப் போக்குவரத்து பஸ்ஸையும் சேவையிலீடுபடுத்தி மக்களின் இன்னல்களைத் தீர்ப்பார்களா?

மீசாலை விஜயகாந்தன்

# தமிழக அரசைத்துவளச் செய்ய எழும் ஏககாலத்து எதிர்ப்பு அலைகள்

## கலைஞர் திண்மைபெறுவாரா? அன்றி வன்மை ஏற்பாரா?

தமிழ் நாடு...... பாரதத்தில் பல மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக விளங்கிய மாநிலம். இம்மாநிலத்தை ஆட்சி புரிந்தவர்களில் படித்த மேதைகளும், படிக்காத மேதைகளும் உள்ளனர்.

தமிழ் நாடு முதலமைச்சராகப் பதவிவகித்த கர்மவீரர் காமராஜர் (காங்கிரஸ்) டில்லியில் ஒருகாலத்தில் 'கிங் மேக்க' ரெனப் புகழாரம் சூட்டப்பட்டவர். மத்திய அரசில் பதவிவகித்தவர்களிடையே குறிப்பாக ஆசிய ஜோதி ஜவகர்லால் நேருவின் பேரன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்தவர் படிக்காதமேதை காமராஜர்.

"காமராஜு நாடாரையா கண்டபடி பேசாதீங்கையா" என்று கொச்சையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடி மட்டத்தொண்டர்கள் கேலி பேசிய வேளையிலும் அதற்கெல்லாம் செவிமடுக்காது நேரிய வழிநின்று கூரிய பணிபுரிந்து பாமரர் முதல் படித்தவர் வரை சகலதரப்பினரிடமும் மதிப்பும் பெற்றிருந்தவர் அவர். பதவியில் ஒட்டிக் கொண்டிராது ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் வகையில் முதலமைச்சர் பதவியைத் துறந்த உத்தம புருஷன் அவர்.

பின் பக்தவத்சலம், பேரறிஞர் அண்ணா முதலானோர் முதலமைச்சர் பதவி வகித்த காலத்திலும் தமிழ் நாட்டின் கீர்த்தி மழுங்கிவிடவில்லை. மேலோங்கியே மிளிர்ந்தது புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் எம். ஜி. ஆர். ஆட்சியிலும் தமிழ் நாட்டின் தரம் தாழ்ந்ததாக மதிப்பிடுவதற்கில்லை.

ஆனால்... இன்று தமிழ் நாட்டின் நிலை... கலைஞர் மு கருணாநிதி முன்னர் ஆட்சிப்பீடத்தினை அலங்கரித்த வேளை அவர்மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. மக்கள் மனதில் மாடி வீட்டுக்கு வழிகோலுகிறார் என்றெல்லாம் எதிரணியினர் வசைமாரி பொழிந்தனர். எனினும் வள்ளுவர் கோட்டம் அமைப்பு முதலான பல்வேறு புதுமைத் திட்டங்கள் மூலம் புகழேணியில் ஏறிக்கொண்டார் அவர். அவருக்கே உரித்தான வாக்குச் சாதுரியத்தாலும் நாஞ்சிலார், நாவலர்' பேராசிரியர் முதலானோரின் துணை கொண்டும் பல சீரிய திட்டங்கள் தீட்டி அவற்றைச் செம்மையாகச் செயற்படுத்தவும் செய்தார்.

புரட்சித்தலைவருக்குப் பின் இப்போது ஆட்சியினை ஏற்றுள்ள கலைஞருக்கு இன்று சங்கடங்கள் பல வடிவத்தில் வருகின்றன. புரட்சித்தலைவரின் காலத்தில் தான் அரசு இயந்திரம் ஆமைவேகத்தில்

**கே.வி.ஆர்.ஸ்ரீ**

இயங்கியது ஃபைல்கள் மலை போல் குவிந்து தேங்கிக்கிடக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் என்றால் கலைஞர் மாத்திரம் என்னவாம்? அசுர வேகத்திலா செயற்படுகிறார்? எதிர்க்கட்சிகளைச் சாடுவதிலேயே பொழுதைப் போக்கடிக்கிறாரே என்று எதிர்க்கட்சியினர் புழுங்குகிறார்கள்.

கர்நாடகத்துடனான காவிரி நீர்ப்பிரச்சினை வேறு தீர்ந்தபாடில்லை. கர்நாடக முதல்வர் டில்லியிலிருந்து திருமபியபின் தான் தீர்வுபற்றித் தெரிய வரும்.

### அமைதிப்படை விவகாரம்

இந்திய அமைதிகாக்கும் படையை சென்னையில் வரவேற்காத விடயம் கலைஞரைப் பொறுத்தவரையில் விஸ்வரூபமெடுத்துப் பெரும் விவகாரமாகவே மாறிவிட்டது.

மத்திய அமைச்சரும் ,ஏப னரும் இப்படையை வரவேற்றுப் பாராட்டிப் பேசிய விழாவை கலைஞர் பகிஷ்கரித்தகர்.

அத்துடன் நின்றாரா அவர்? ஈழத்தில் 5000 தமிழரைக் கொன்று குவித்த படையை வரவேற்க நான் செல்வதா? என்று வெகுண்டெழுந்து தன் தமிழபிமானத்தை நிலைநிறுத்தினார்.

இவ்விவகாரத்தைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்ட இந்திரா காங்கிரஸாரும், அ தி, மு, க வினரும் சட்டசபையில் பெருத்த சர்ச்சையைக் கிளப்பினர் இந்திய இராணுவத்தை இழிவுபடுத்தி விட்டார் முதல்வர் என்று கண்டனம் செய்தனர்

இவற்றுக்குப் பதிலளித்த கலைஞர் 'நான் இந்திய இராணுவத்தை இழிவு படுத்தவில்லை இந்திய இராணுவம் மீது எனக்கு மதிப்பு உண்டு ஆனால் ராஜீவ் இராணுவத்தைப் பிழையாக வழிநடத்தி விட்டார் என்று சொன்னார்.

### தலைவர் பிரபா

"ஈழத்தில் இந்திய இராணுவம் நடந்து கொண்ட விதத்தை நானறிவேன்" என்று குறிப்பிட்ட கலைஞர், 1988-ல் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரன் எனக்கு இந்திய இராணுவத்தின் நடந்ததைப் பற்றிய கடிதம் இதோ என்று கூறி அதைச் சட்டசபையில் உறுப்பினர்களுக்கு வாசித்துக் காட்டினார்." அமெரிக்க இராணும் வியட்னாமில் போரிட்டபோது பல கண்டனங்கள் எழுந்தன அவர்களை தெய்வம் என்று எவரும் போற்றவில்லை. எனவே தவறிழைத்தால் கண்டனத்தை ஏற்கத்தான் வேண்டும்' என்று விளாசினார் கலைஞர், அமைதிப்படை வரவேற்பில் கலைஞர் கலந்து கொள்ளாத விடயம் லோகசபாவில் கூட எதிரொலித்தது.'தமிழக முதல்வரின் செயற்பாடு வியப்பைத் தருகிறது' என்று மத்திய அரசு விவகாரத்தைப் பெரிதுபடுத்தாது சமாளித்து விட்டது.

### அண்ணாவின் பாசறை

எதிர்க்கட்சியினர் கலைஞரை ஆட்சியிலிருந்து அகற்றிவிடப பகீரதப் பிரயத்தனங்கள் மேற்கொண்டுள்ளபோதும் கலைஞர் பேரறிஞர் அண்ணாவின் பாசறையில் பெற்ற அனுபவத்தின் திண்மை கொண்டு தொடர்ந்து பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

### அ.தி மு க உட்பூசல்

இதேவேளை அ. தி. மு. க வுக்குள் ஏற்பட்டுள்ள பூசல் நாகரீக அரசியலுக்கு ஊறு ஏற்படுத்தும் நிலைக்கு வந்து விட்டதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. அ.தி.மு.க வின் மூத்த இணைச் செயலாளர் திரு எஸ் டி. சோமசுந்தரத்துக்கும் இணைச் செயலாளர் திரு ஆர். எம் வீரப்பனுக்கும் இடையில் சொற்போர் வலுத்துவருகின்றது ஜெயலலிதாவின் தலைமையை வீரப்பன் சாடுகிறார் சோமசுந்தரமோ தமிழகத்தின் ஒளி விளக்கு ஜெயலலிதா தான என்று அவர் பக்கம் பாடுகிறார். அ.தி.மு.க வுக்குள் ஸ்திரமான நிலைப்பாடோ,உறுதியான தலைமையோ கிடையாது என்பதையே இது காட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர் இ காங்கிரஸும் அதிமுகவை முண்டாகக் கொண்டு திமுகவை வீழ்த்திவிடமுனைகிறது முனைப்பாக ஜெயலலிதாவின் முந்தானையைப் பிடித்திழுத்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் களேபரம் செய்தபோது சில மாதங்களுக்கு முன் நாற்றமெடுத்த விவகாரம் ஒன்று கிளம்பி தமிழகத்தின் மானத்துக்குக் குந்தகம் விளைவித்தது.

எனவே இன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தமக்கிடையிலான குறுகிய வேறுபாடுகள் குரோதங்களைக் களைந்து ஒன்றுபட்டு செயற்பட்டு மாட்சிமிக்க தமிழகத்தின் பெருமையைப் பேணிக்காத்து உயர்வின் உச்சத்துக்குச் செல்ல வேண்டும் என்பதே உலகெங்கும் பரந்துபட்டு வாழும் ஒவ்வோர் தமிழனினதும் இதய அவாவாகும்.




## பார்வையற்றோர்/பார்வை குறைந்தோருக்கான கல்வி

- மேற்படி கல்விவசதி நவீல்ட் பாடசாலை கைதடியில் உள்ளது.
- கல்வி, விடுதி வசதி, உணவு யாவும் இலவசம்.
- சிறுபிள்ளைகளைப் பராமரிப்பதற்கு விசேட உதவியாளர் உண்டு.
- 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பயிறசி அளிக்கும் திட்டம் உண்டு.
- பல்கலைக்கழகப் படிப்பு வரை வசதிசெய்து கொடுக்கப்படும்

நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொள்க

அதிபர்
நவீல்ட் பாடசாலை

விழிப்புலனிழந்தோர் கல்வி நிலையம்,
கைதடி.

04216


## ரமழான் சிந்தனைகள்

### தலைமுடியையும் ஒழுங்காககவனியுங்கள்

"எவருக்கு தலைமுடி இருக்கிறதோ அவர் அதனை ஒழுங்காகக் கவனித்து வரவும்" என அருமைநாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்தார். அவருடைய தலைமுடியும், தாடியும் அலங்கோலமாக விரிந்து கிடந்தன. அப்பொழுது அருமைநாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் அவருடைய முடியை ஒழுங்கு படுத்துமாறு கட்டளையிடுவது போல் சாடை செய்தனர். எனவே அவர் சென்று அவ்விதம் செய்து கொண்டு திரும்பினார். அப்பொழுது அருமைநாயகம் (ஸல்) அவர்கள் சாத்தான் போல் தலைவிரி கோலமாய் உங்களில் ஒருவர் வருவதை விட இது மிகவும் மேலாக இல்லையா? என்று கூறினார்.

மீசையை கத்தரித்து அகற்றிவிட்டுத் தாடியைவிட்டு விடுங்கள் என்று அருமைநாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"அருமைநாயகம் (ஸல் அவர்கள் தங்களின் மீசையைக் கத்தரிக்கச் செய்தனர். அன்றி, நிச்சயமாக, இப்ராஹீம் (அலை) அவர்களும் இவ்விதம் செய்து வந்தார்கள்' என்றும் கூறினார்கள். 23

## பயிற்சியாளர் நாடுதிரும்பினர்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனமும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்திய உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், உழைக்கும் மகளிர் குழுக்கள் ஆகியவற்றை வழிநடத்துவதற்கான முகாமைத்துவப் பயிற்சி நெறியில் உள்நாட்டிற் பயிற்சி பெற்றுப் பின் இந்தியாவுக்குப் பயிற்சிக்கு சென்ற 25 யுவதிகள் நாடு திரும்பியுள்ளனர்.

பயிற்சி முடித்து நாடு திரும்பும் யுவதிகளுக்கான ஐக்கிய நாட்டு அபிருவித்தி நிறுவனச் சான்றிதழ்களை எதிர்வரும் 25ம் திகதி கொழும்பு தேயிலைச்சபை மண்டபத்தில் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின பயிற்சியாளர்களுக்கு வழங்குவார்

(33)



நேற்றைய எழுச்சிப்பாடல்கள் நிகழ்ச்சியில் மாத்தயா, காசிஆனந்தன், யோகி, புதுவைரத்தினதுரை ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம்.

கல்வி அமைச்சின் புதிய திட்டம்

# தம்மைமுழுதும் அர்ப்பணிக்கும் ஆசிரியருக்குப்பதவி உயர்வு

ஆசிரியத் தொழிலில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும் ஆசிரியர்களுக்குப் பதவியுயர்வுகள் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தபடும்.

இத்தகவலை கல்வி,உயர் கல்வி அமைச்சர் திரு.லலித் அத்துலத்முதலி வெளியிட்டார்.

5 ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களில் பணம் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 25,000 மாக உயர்த்தப் படவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்,

# 14கூட்டுத்தாபனங்களை அரசு தனியார் வசம் ஒப்படைக்கும்

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் 14 கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசு பொறுப் பேற்ற நிறுவனங்களை இவ்வருடத்திற்குள் தனியார் துறையினரிடம் கையளிப்பதென அரசு கொள்கையளவில் தீர்மானித்துள்ளது.

இந்த நிறுவனங்களில் போதிய உற்பத்தி நடைபெருத காரணத்தினுலும், போதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்படாததாலும் இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகக் கைத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 22 ஆயிரம் ஊழியர்கள் இந்த 14 நிறுவனங்களிலும் தற்போது கடமை புரிகின்றனர்.

1977ம் வருடம் இந்த நிறுவனங்களில் கடமையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இது 1300 குறைவாகும்.

### கீரிமலையில்...

மறைத்து வைத்து விற்கப்படுவதாகவும், இதனுல் கீரிமலையில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் கடந்த சனிக்கிழமை முரசொலி நேரடி றிப்போட்டில் குறிப்பிடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

### கூட்டுறவு...

ரூபாவரை தாராளமாக விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. தனியார் துறையினரிடம் தரமான மல்லையை கொள்வனவு செய்து குறைந்த விலையில் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ள கூட்டுறவுச் சங்கத்தினர், உணவு இலாகா தம்மிடம் மொத்த விற்பனை வரி அறவிடுவதால் தனியார் துறையினருடன் போட்டி போட்டு பாவனையாளர்களுக்கு பொருட்களை வழங்க முடியாதுள்ளதென்றும் கூட்டுறவு சங்கம் கவலைத் தெரிவித்துள்ளது. (41)

# கப்பல்துறை அமைச்சர் மஹ்ரூப் காங்கேசன்துறை விஜயம்

துறைமுக, கப்பல்துறை அரசாங்க அமைச்சர் ஜனுப் எம். ஈ. எச். மஹ்ரூப் காங்கேசன்துறை துறைமுகத்தைப் பார்வையிட விரைவில் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிலைமைகள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆராய இருப்பதாக அவர் தெரிவித்துலளார்.

கடந்த வாரம் தாம் அதிகாரிகள் சகிதம் திருகோணமலைத்துறைமுகத்துக்கு விஜயம் செய்து துறைமுக நிலைமைகளைப் பார்வையிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்,

### கணிதத்திற்கு—

தம் ஒன்று கிடைத்துள்ளதாம் அந்தக்கடிதத்தில் எனக்கு கணிதப்பாடம்சுத்தமாக ஏருது. எனவே தயவு செய்து கணிதத்திற்கு சி போடவும் சி எனக்கு நீங்கள் போட்டால் இந்த விசிட்டிங் காட்டில் உள்ள விலாசத்திற்கு பரீட்சை முடிவுகள் வெளி வந்தவுடன் வந்து சந்திக்கவும் தகுந்த சன்மானம் கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததாம்.(03)

★ எழுச்சிப் பாடல் நிகழ்ச்சியில் யோகி விளக்கம்

# போராட்டத்தில் நாம் கல்வியை இழந்தோமா?

எமது போராட்டத்தில் நாம் கல்வியை இழந்து விட்டோம் எனக்கூறுகிறனர் இது தவறு, நாம் கல்வியை இழக்கவில்லை. கல்வி என்பது பாடசாலை சென்று பட்டம் பெறுவதில்லை இன்று தமிழீழத்தைப் பாருங்கள் தமிழீழ இளைஞர்கள் எல்லோருமே போராட்டத்தில் இணைந்து கொண்டதன் மூலம் உலகைப் புரிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் யோகி நேற்று தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார் அவர் மேலும் பேசுகையில் உலகில் உள்ள நவீன சருவிகளை இயக்க புரிந்து கொண்டுள்ளனர் அது ஆயுதங்களாகவோ, தொலைத்தொடர்பு சாதனங்களாகவோ, வீடியோவாகவோ இருக்கலாம் பல்தொழில் நுட்ப கருவியாக இருக்கலாம் இவற்றை இயக்கும் திறமை எமதுபோராளிகளிடம் உண்டு ஆயுதங்களை உள்ளூரில் தயாரிக்கும் திறமை எமது போராளிகளிடம் உண்டு இவர்கள் பட்டம் பெறவில்லை ஆனுல் யதார்த்த பூர்வமாக இந்த மண்ணோடு இந்த மக்களோடு கலந்து ஒரு கல்வியை சுற்று கொண்டனர்,

எனவே கல்வி என்பது வேறு ஒரு வகையில் இங்கு வளர்ச்சியடைந்துள்ளது பெரிய பொருளாதார நிபுணர்கள் திட்டங்களைப் போடுவார்கள் இது மக்களை சென்றடையாது. ஆனுல் மக்களுடன் வாழும் போராளிகளுக்கு ஓர் திட்டத்தை சரியான வகையில் செயற்படுத்த தெரியும்இதற்கு எங்கோ சென்று கல்விகற்கத் தேவையில்லை போராட்டத்துடன் கல்வி கற்றனர் அனுபவம் பெற்று வளர்கின்றனர் என்று யோகி குறிப்பிட்டார்

### விழிப்பாயிருங்கள்...

எழுச்சிப்பாடல் நிகழ்ச்சி நள்ளிரவு வரை நீடித்தது, விடுதலைப்புலிப் போராளிகள் ஆயுதங்களுடன் மைதானத்தைச் சுற்றி காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

### கெவிறிபா மடு...

ளப்பில் உள்ள சகல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலனும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

மாநாட்டையடுத்து சகலரும் கெவிறியாமடு குடியேற்றத்திற்கு சென்றனர். அங்கிருந்து வெளியேறிய தமிழ் அகதிகளுடன் உரையாடிய போது அவர்கள் அங்குள்ள இலங்கை இராணுவ முகாமை அகற்றினுல் தாம மீண்டும் அங்கு சென்று குடியேற முடியும் என வலியுறுத்தினர்.

இது தொடர்பாக ஜனுதிபதியுடன் தற்போது பேச்சுகள் நடைபெறுவதாக கரிகாலன் குறிப்பிட்டார். இதே சமயம் இங்கு குடியேறவுள்ள தமிழர்கள் மட்டுநகருக்கு வருவதற்கான பாதையை தமிழ் பகுதிகளூடாக அமைக்குமாறும்கோரிககை விடப்பட்டது. இதற்கு அரச அதிபர் சம்மதித்துள்ளார்.

கடந்த கால வன்முறைகளின் போது இக்குடியேற்றத்தில் இருந்த பன்னிரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டமையும் அவர்களது குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படாமையும் குறிப்பிடத்தக்கது, (03)

இந்திய—இலங்கை கலாசார சம்மேளனம்

# ஜனுதிபதி பிரேமா கோர்பச்சேவ் ஆகியோருக்கு சமாதானப்பரிசு

இந்திய இலங்கை கலாசார சம்மேளனம உலக சமாதானத்திற்கு உழைத்த மூன்று அரசியல் தலைவர்களுக்கு சமாதானப் பரிசு வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

ஜனுதிபதி பிரேமதாஸ ரஷ்ய ஜனுதிபதி கொர்பச்சேஸ பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் ஆகியோருக்கே இச்சம்மேளனம் சமாதானப்பரிசை வழங்கவுள்ளது.

இப்பரிசளிப்பு வைபவம் இலங்கையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# இரு முஸ்லிம்கள் கடத்தல் விடுதலைப்புலிகளிடம்முறைப்பாடு

ஆண்டியா புளிங்குளம் என்னுமிடத்தில் முஸ்லீம் சமூகத்தினைச் சேர்ந் இருவர் கடத்தப்பட்டுள்ளனர் என தெரியருவகின்றது, இவர்களை கடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை.

இக் கிராமத்தில் சில நாட்களுக்கு முன்பு முஸ்லீம் சமூகத்தினருக்கிடையில் ஏற்பட்ட ஒரு கலத்தின் போது மூன்று முஸ்லீம்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே,

இக் கடத்தல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# தமிழ்ப் பொலிஸார் மட்டுமே மட்டுநகர் காவல் கடமையில்

நேற்று முதல் மீண்டும் மட்டக்களப்பில் பொலிஸார் வீதி போக்குவரத்து கண்காணிப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர் வங்கிகளிலும் பொலிஸார் காவற் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது கடமையில் உள்ள சகல பொலிஸாரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, விடுதலைப் புலிகளின் அனுமதியை அடுத்தே நேற்றுப் பொலிஸார் தமது கடமையில் ஈடுபட்டிருந்தனர்

### ஐ. நா. அபிவிருத்தி—

அதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படுமென்றும் மேற்படி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

இக் கூட்டத்திற்கு யாழ் கல்விப்பணிப்பாளர் திரு.இரா. சுந்தரலிங்கம் தலைமை தாங்கினர். ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தை சேர்ந்த திரு. அரல்தல்லாவும் இதில் கலந்து கொண்டார்.

### உணவு...

பதிந்த பலகுடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பதிவு வேலைகள் பல கிராமசேவையாளர் பிரிவுகளில் முடிவடைந்து உணவு முத்திரை விநியோகம் நடைபெற்று வருகின்றது. (3)


சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வரைவுள்ளது] சுன்னுகம்

அறிவித்தல்

சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4000ற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 250/-ஐக் இச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

28-04-1990 சனிககிழமை பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பல. நோ. ச. சங்கம்
சுன்னுகம்.
20-04-1990

பொது முகாமையாளர்

04227


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஆ இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 24.04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது